பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 85

புதன்கிழமை
19 பெப்ரவரி 2025

மாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

**டிஜிற்றலுக்கு 5 ஆண்டு திட்டம்**

» 03

ஏப்ரல் மாதத்துக்கு முன்னர்

## தேர்தல் அறிவிப்பை வெளியிடவேண்டாம்

தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சி நேற்று வலியுறுத்து

கொழும்பு, பெப்ரவரி 19

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை, மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுக்கக் கூடாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் எதிர்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

08

## செம்மணி மனித எச்சங்கள் போலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நேற்று மாலை முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் செம்மணியில் உள்ள சிந்துபாத்தி இந்துமயானத்தில் அண்மையில் அபிவிருத்திப் பணிகளுக்காக நிலத்தைத் தோண்டியபோது மண்டையோடு உள்ளிட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இந்த விடயம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் மேற்படி விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகள்

15

உள்ளூராட்சித் தேர்தல்

## வேட்பு மனுக்கள் கோருவதை மார்ச் 21வரை பிற்போடுங்கள்

கஜேந்திரகுமார் எம்.பி. நாடாளுமன்றில் அழுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 19

வரவு செலவுத் திட்ட விவாதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி முடியும் வரையில் வேட்பு மனுக்களைக் கோரவேண்டாம். உடனடியாக வேட்புமனுக்களைக் கோரினால் நாடாளுமன்றத்தில் நடக்கும் விவாதங்களில் பங்கேற்கமுடியாது போகலாம்

15

## ஆசிரியர்கள் பயணித்த பேருந்து மீது கல்வீச்சு!

யாழ்., பெப். 19

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுப் பாடசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாகனம் ஒன்றின் மூலம் ஆசிரியர்கள் சென்றுவரும் நிலையில், அவர்கள் பயணித்த பேருந்தை இலக்குவைத்து கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை

08

**வங்கிப் பணம் கையாடல்: மறியலில் முகாமையாளர்**

» 08

## தமிழ் அரசியற்கைதிகளை உடனடியாக விடுவியுங்கள்

18,000 கையொப்பங்களைத் திரட்டி ஜனாதிபதியிடம் மனு ஒப்படைப்பு

கொழும்பு, பெப். 19

தமிழ் அரசியற்கைதிகள் அனைவரையும் எந்தத் தாமதமும் இல்லாமல் உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மனு வழங்கப்பட்டுள்ளது. போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், சுமார் 18 ஆயிரம் கையொப்பங்களுடன் இந்த மனு ஜனாதிபதியின் கவனத்துக்காகவும், உடனடி நடவடிக்கைக்காகவும்

08

உள்ளூராட்சித் தேர்தலின்போது

## தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட வியூகம்

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் இணைந்தே உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

15







## பாண், கோதுமை 10 ரூபா குறைப்பு

கொழும்பு, பெப். 19

பாணின் விலையையும், கோதுமை மாவின் விலையையும் 10 ரூபாவால் குறைப்பதற்கு நடவடிக்கை

15

## கொத்து, ரைஸ் விலை உயர்வு!

கொழும்பு, பெப். 19

உணவுப்பொருள்கள் சிலவற்றின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கைச் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள்

15

தமிழரசுக் கட்சியிலிருந்து

## சிறீதரனை நீக்குகின்ற பேச்சுக்கே இடமில்லை

பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழரசுக் கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை நீக்குவது தொடர்பில் எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று கட்சியின் பதில்

08

## டிப்பர் மோதி ஒருவர் சாவு!

அரியாலையில் நேற்றுக் கோரம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஜோசப் பாஸ்கரன் (வயது - 61) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

08







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3992 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 01 37 42 60 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹரண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1060 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 16 26 35 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0019 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 4 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2099 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 07 16 32 61 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5751 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 5 4 9 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1781 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 24 39 63 67 |
| விசேட எழுத்து | G |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 18.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 326 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 9 3 |

# அரசின் செயற்பாடுகளால் இலங்கை வடகொரியாவாகும்

## எச்சரிக்கின்றது மொட்டுக்கட்சி

**கொழும்பு, பெப்.19**

**ஜனநாயக உரிமைகளை ஒடுக்கும் செயற்பாடுகளை அராசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. இலங்கை, வடகொரியாவாக மாறுவதைத் தடுப்பதற்கு மக்கள் அனைவரும் குரல்கொடுக்க வேண்டும்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றவுடன் செய்த முதல் வேலை, தமது தேர்தல் பிரசார மேடைகளில் ஏறிய ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் மற்றும் அரச பாதுகாப்புப் பணிகளில் உயர்பதவிகளில் நியமித்தமையாகும். இதற்கு முன்னர் எந்தவொரு அரச தலைவரும் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்ததில்லை. தற்போது பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. மறுபுறம் சட்டமா அதிபர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அது மாத்திரமின்றி அரசியல் கட்சிகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் இவ்வாறான ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக மிகக் கடுமையாக எதிர்ப்புகளை வெளியிட வேண்டும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | 0459 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 7 6 7 2 0 0 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2725 | Q | 05 33 37 75 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 12 13 45 80 | 4886 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ரிசபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 23 28 47 51 | 4437 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 36 | 15 23 40 52 | 1901 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 07 13 27 73 | 2551 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 18.02.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0625 | 03 06 14 |

# நாமலுக்குப் பிணை

கொழும்பு, பெப். 19



சர்ச்சைக்குரிய கிரிஷ் ஒப்பந்த வழக்குத் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அதன்படி, நாமல் ராஜபக்ச 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நாமல் ராஜபக்சவுக்கு எதிராக சட்டமா அதிபரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரிகை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வாகன இறக்குமதி அபாயகரமானது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 19

தற்போதைய நடைமுறையில் வாகன இறக்குமதி அபாயகரமானது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதத்திற்கு வரியை அதிகரிக்கவேண்டும். இதற்கு மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்வதே பிரதான பங்களிப்பு என ஜனாதிபதி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அது எப்படியென நான் தேடிப் பார்த்தபோது, வரியில் பாதி வாகன இறக்குமதியில் இருந்து வருகின்றது. எனவே வாகனங்களை இறக்குமதி செய்வது மிகவும் ஆபத்தானது.

ஏனெனில் வரியுடன் மிகப்பெரும் தொகையைச் செலுத்தி இலங்கையில் வாகனங்களைக் கொண்டு வரும் அளவுக்குச் செல்வந்தர்கள் இருக்கின்றனர் என நான் நினைக்கவில்லை- என்றார். (ச-இ)



# மதுபானம், சிகரெட் விலை அதிகரிக்காது

கொழும்பு. பெப். 19

மதுபானம் மற்றும் சிகரெட் என்வற்றின் விலை அதிகரிக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதீட்டில் மதுபானம் மற்றும் சிகரட் விலை அதிகரிக்கக்கூடும் என வெகுவாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலை அதிகரிக்கப்படாது.

இந்த ஆண்டு ஜனவரியில் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனவே வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக மீண்டும் விலை அதிகரிக்கப்படாது என்றும் மதுவரித் திணைக்களத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# ஒரு பட்ஜெட்டில் முழுவதையும் செய்துமுடித்துவிட முடியாது!

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19

முதலாவது வரவு - செலவுத் திட்டம் என்பது. இந்தப் பயணத்தில் ஒரே ஒரு குறிப்பிடப்பட்ட பாத்திரம் எனப் பொருளாதார மேம்பாட்டுப் பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அத்தியாவசிய பொருட்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவது தனது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தாலும், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது சில கட்டுப்பாடுகள் இருந்தன.

ஒரே வரவு-செலவுத் திட்டத்தில் எல்லாவற்றையும் செய்து முடிக்க முடியாது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனினும், இந்த முதல் வரவு-செலவுத்திட்டத்தில் நாங்கள் என்ன செய்வோம் என்பதை கொள்கை அறிக்கையில் கூறவில்லை. சர்வதேச நாணய நிதியத்திட்டத்தின் கீழ் கூட, நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சிக்கிக்கொள்கிறோம்.

எதிர்காலத்தில் இந்த வற் வரியை நீக்குவதற்கு நாங்கள் பாடுபடுவோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் பொருளாதாரத்துக்கு அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டம்

கொழும்பு, பெப். 19

**இலங்கையில் டிஜிற்றல் பொருளாதாரத்தை விரைவுபடுத்த 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 3,000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத்தை 15 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் அதிகரிப்பதே இலக்கு என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

டிஜிற்றல் பொருளாதாரத்தை விரைவுபடுத்த அரசாங்கம் புதிய சட்டங்களையும் இயற்றும் முன்மொழிவுகளை வழங்கியுள்ளது. டிஜிற்றல் துறையில் உள்ள பிற சிறப்பு நிறுவனங்களைப் போலவே உயர் மட்ட டிஜிற்றல் பொருளாதார அதிகாரசபையை நிறுவுவதே அரசாங்கத்தின் முதல் நோக்கமாகும். டிஜிற்றல் பரிவர்த்தனைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் சைபர் பாதுகாப்பு, தரவு தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை வலுப்படுத்தவுள்ளது. இது பொருளாதாரத்தை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லும் என்றும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## மின்தடையைத் தடுக்க தீர்வுத்திட்டம் சமர்ப்பிப்பு

கொழும்பு, பெப். 19

மின்தடை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கான குறுகியகால மற்றும் நீண்டகாலத் தீர்வுகளை முன்வைத்து இலங்கை மின்சாரசபை அறிக்கை வெளியிட்டுள்ளது. இதில் திடீர் மின்தடையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மற்றும் வழிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சில மின்பிறப்பாக்கிகளைக் குறைந்த இயக்க மட்டங்களில் வைத்திருத்தல், சிக்கல்களைத் தவிர்க்கத் தேவைப்படும்போது குறைந்த கேள்வியுள்ள காலங்களில் சூரியசக்தியைக் குறைத்தல் ஆகியவை முக்கிய நடவடிக்கைகளில் உள்ளடங்குவதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## போலி விசாக்களுடன் யாழ்.தம்பதியர் கைது

கொழும்பு, பெப். 19

போலியான கனேடிய விசாக்களைப் பயன்படுத்தி ஜப்பான் வழியாகக் கனடாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற தம்பதியர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பானின் நரிட்டாவுக்கு கடந்த திங்கட்கிழமை புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் ஏறுவதற்காக அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

## மாணவர்கள் வீழ்ச்சியால் பாடசாலைகள் மூடல்!

கொழும்பு, பெப். 19

கடந்த மூன்று ஆண்டுகளில் பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் பல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.


2020 - 2023 காலப்பகுதியில் 59 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 4063.685 ஆக காணப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3.882.688 ஆக 4.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 249.494 ஆகக் காணப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 237.787 ஆகக் 4.7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் கல்வித்திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ச- 25,6)



## பெரும்போகத்தில் விளைச்சல் வீழ்ச்சி

யாழ்ப்பாணம். பெப். 19

யாழ்.குடாநாட்டில், பெரும்போக நெற்செய்கையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுஎனநெற்செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சீரற்ற காலநிலை மற்றும் நெற்செய்கையில் ஏற்பட்ட மடிச்சுக்கட்டி போன்ற நோய்த்தாக்கங்களால் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. இதனால் அறுவடையின் போது அதிக விளைச்சலை பெற முடியாதுபோயுள்ளதுஎன்றும் அவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-25,17)



## காங்கேசன்- நாகபட்டினம் கப்பல்சேவை மீண்டும்

யாழ்ப்பாணம், பெப். 19

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவை எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல்சேவை நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் காலை 7.30 மணிக்கு நாகபட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப 1.30 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தைச் சென்றடையும்.

இந்தக் கப்பல்சேவை செவ்வாய்க்கிழமை தவிர்ந்து வாரத்துக்கு 6 நாள்கள் சேவையில் ஈடுபடும். பயணச்சீட்டுகளை www.sailsubham.com என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து பதிவுசெய்யமுடியும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-25,27)




ஆறின கஞ்சியைப் பழங்கஞ்சியெண்டு கழிச்சு விடாமல் அதையும் சூடாக்கி, எல்லாத்தையும் குழப்பியடிக்கிறதெண்டுதான் திசைகாட்டிக்காரரும் நிக்கினம் போல. போனவருசம் கிளிநொச்சிப் பள்ளிக்கூட விளையாட்டுப்போட்டியில, இல்ல மொண்டுக்கு கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத் தின்ர முன்பக்கவளைவு மாதிரி தென்னோலையில வடிவாச் செய்துவைச்சவை. ஆனாலும் ஆருக்கும் அப்பிடிச் செய்தது பொறுக்கேலை. பேஸ்புக்கில அந்த அலங்காரப் படங்கள் வர அதைவைச்சு, ரி.ஐ.டி.க்காரர் 'என்னெண்டு உப்பிடி இயக்கத்தின்ர மாவீரர் துயிலுமில்லத்தை, பள்ளிக்கூடத்தில செய்வியள்?' எண்டு விசாரணையில இறங்கிட்டினம். அதிலையும் அந்த அலங்காரத்துக்குப் பொறுப்பா இருந்த மாஸ்ரரை கிளிநொச்சியில கொண்டுபோய் விசாரிச்சு, வாக்குமூலம் எல்லாம் எடுத்துப்போட்டுத்தான் விட்டவை. சரி, இந்த வாக்குமூலத்தோட பிரச்சினை தீர்ந்திட்டுது எண்டுதான் எல்லாரும் நினைச்சவை. ஏனெண்டால் ஒரு வருசத்துக்கும் மேல அதைப்பற்றி பிறகு ஒரு சத்தம், சந்தடியும் இல்லை. அதுக்குள்ள ஆட்சியும் மாறிட்டுது. 'எல்லாத்தையும் மாத்துவம், இலங்கையை உயரத்தில ஏத்துவம்' எண்டு சொல்லிக்கொண்டு வந்தவை, இப்பிடியான சில்லறை விசயங்களை பெரிசாக் கண்டுகொள்ளாயினம் எண்ட நினைப்புத்தான் எல்லாருக்கும்.

ஆனால் இடிவிழுந்தமாதிரி இப்ப அந்த விசயத்தைத் தோண்டியெடுத்து, ஒரு வருசத்துக்குப் பிறகு ரி.ஐ.டி.க்காரர் விசாரணைக்கு அந்த மாஸ்ரரை நாலாம் மாடிக்கு வரச்சொல்லியிருக்கினம். வரேக்க 'பள்ளிக்கூடப் பிள்ளையள் சோடிச்சவையா? அப்பிடிச் சோடிச்சிருந்தால் அவையின்ர லிஸ்ட்டோட வாங்கோ' எண்டும் சொல்லுப்பட்டிருக்காம். இப்ப மாஸ்ரர் மட்டுமில்லாமல் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கும், அவையின்ர பெற்றோருக்கும் ஒரே கலக்கம். எப்பவோ நடந்த ஒரு சோடினைக்காக, இப்பிடி விசாரணை,லிஸ்ட்டோட வா எண்டெல்லாம் வெருட்டுறது மஹிந்த காலத்தோட முடிஞ்சுது எண்டு பார்த்தால், திசைகாட்டிக் காலத்திலையும் அது கொடிகட்டிப் பறக்குது.

'இது முந்தின அரசாங்க காலத்து விசாரணை, நாங்கள் ஒண்டும் செய்யேலாது' எண்டும் திசைகாட்டிக்காரர் நழுவ ஏலாது. ஏனெண்டால் இதொண்டும் நீதிமன்ற வழக்கில்லை. நீதிமன்ற வழக்கெண்டால்தான் கட்டாயம் முந்தினகால வழக்குக்கும், இப்ப தவணைக்குக் கூப்பிடுவினம். ஆனால் இது அரசாங்கத்தின்ர கட்டுப்பாட்டில இருக்கிற ரி.ஐ.டி.காரரின்ர விசாரணை. இப்பிடி உப்புச்சப்பில்லாத விசயத்துக்கு விசாரணை செய்யத் தேவையில்லை எண்டு அரசாங்கம் ஓர்டர் போட்டிருந்தால், ரி.ஐ.டி.க்காரர் பம்மிக்கொண்டிருப்பினம். ஆனால் அரசாங்கம் கண்டபடி அவிட்டு விட்டால், வேட்டைநாய் எங்கேயோ கிடந்த பழைய எலும்பையெல்லாம் தூக்கிக்கொண்டு வாற மாதிரி, ரி.ஐ.டி,க்காரரும் பழைய விசாரணையளைச் செய்யத்தானே பாப்பினம். இப்பிடி சோடிச்சதுக்கு விசாரணை செய்து நேரத்தை வீணாக்கிறதை விட, கோடிக்கணக்கில சனத்தின்ர காசைக் கொள்ளையடிச்சவை பற்றி விசாரிச்சாலாவது பிரியோசனமா இருக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ராசிபலன்

**மேடம்:** உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்படுவீர்கள். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலை தூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** காரியங்கள் முடிவதில் சிறு சிறு தடைகள் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் எதிர்பாராத சலுகை கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. அலுவலகத்தில் சில விமர்சனங்களைச் சந்திக்க நேரிடும்.



# அறநெறிப் பாடசாலை திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலை நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டது. சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாவட்ட மேலதிக செயலர் கனகராசா சிறிமோகன் அறநெறிப் பாடசாலையைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், யாழ்.மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சு. உதயபாலன், வலி மேற்கு பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.ஜெயராஜன், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தின் 50 வயதுக்கு மேற்பட்ட சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். சனசமூக நிலையத்துக்கான சந்தாபணத்தைச் செலுத்தும் அங்கத்தவர்களை ஊக்குவிக்கும் முகமாக குலுக்கல் சீட்டின் மூலம் துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. (ஏ-25,125)

# கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.19

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் சங்கத்தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ச-41)

# மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.19

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அதிபர் து.திலீப்குமார் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக விஞ்ஞானஇளமாணியும் பட்டயப்பொறியியலாளரும் பிரதம பொறியியலாளரும் பழையமாணவருமான எந்திரி க.கணேசமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ச-41)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், பெப். 18

தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் உ.தனசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ளது . நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலைய விரிவுரையாளர் நீ.தவராசா, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் அதிபர் செ. பேரின்பநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-28)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், பெப். 19

வட்டுக்கோட்டை தெக்கணம்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயம் உட்பட கண்ணகியம்பன் ஆலயங்களில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை விஷேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோஷ பூஜை வழிபாடுகளும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)



# சிவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாண[illegible], பெப்.19

அருள்மிகு [illegible]ானாம்பிகை உடனாய ஞானலிங்[illegible]ச்சுரர் திருக்கோவிலில் மகா சிவராத்திரி விரத வழிபாடுகள் எதிர்வரும் 26ஆம் திகதி புதன் கிழமை இடம்பெறவுள்ளன.

இந்நாளில் நாள் முழுவதும் அடியார்கள் தங்கள் கரங்களினால் எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்து வழிபாடு ஆற்றலாம்,

நான்கு காலங்களிலும் நான்மை வழிபாடுகள் இடம்பெற்று நால்வகை அருளமுது படைக்கப்படும், எம்பெருமானின் புகழ்பரப்பும் முத்தமிழ் நிகழ்வுகளான வாத்திய இசை அரங்கம், பரதநாட்டியம், வீணை இசை அரங்கம், தெய்வீக இசை அரங்கம், இசை நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் சிவனடியார்களுக்கு திருக்கோவிலில் சிறப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட் டுள் என என்று இணுவில் சைவநெறிக்கூடம் தெரிவித்துள்ளது. (ச-41)

# யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தினால் 'அக்ரிரெக்' செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் 'அக்ரிரெக் 2025' செயற்றிட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி அறிவியல்நகரில் உள்ள விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயம் சார்ந்த நிறுவனங்களை ஒன்றிணைத்து வருடம்தோறும் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வருடம் விவசாயப் பகுதிகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பங்களையும் கண்டுபிடித்து கண்காட்சி இடம்பெறவுள்ளது என்று விவசாயப்பீடப் பீடாதிபதி கே.பகீரதன் தெரிவித்துள்ளார். (ச-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியமணல் ஆய்வுக்கெதிராக போராட்டம் நடத்துவதற்குத் தடை



மன்னார், பெப்.19

மன்னாரில் கனியமணல் அகழ்வு ஆய்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு மன்னார்நீதவான்நீதிமன்றம்நேற்றுமுன்தினம்தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. மன்னார் பொலிஸார் தாக்கல் செய்திருந்த மனுவை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கனியமணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்காக அரச திணைக்கள அதிகாரிகள் இரு தடவைகள் மன்னார் சென்றிருந்தனர். ஆயினும் அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டதால் திணைக்கள அதிகாரிகளும், இந்த விடயத்துடன் தொடர்புடைய தனியார் நிறுவனமும் ஆய்வுகளை மேற்கொள்ளாது திரும்பிச்சென்றிருந்தன.

கனிய மணல் அகழ்வால் மன்னாரில் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டும் மன்னார் மக்கள், அங்கு கனிய மணல் அகழ்வுகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும் வலியுறுத்தி வருகின்றனர். தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மன்னாருக்குத் தேர்தல் பரப்புரைக்காகச் சென்றிருந்த அநுரகுமார திஸாநாயக்க, மன்னார் மக்களுக்கு விருப்பம் இல்லாத கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் அரச திணைக்கள அதிகாரிகளும், இந்த விடயத்துடன் தொடர்புபட்ட ஓரியன் மினரல் நிறுவனமும் மன்னார், ஓலைத்தொடுவாய் மற்றும் தோட்டவெளிப் பிரதேசங்களுக்கு ஆய்வுக்காக வரவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்பதால், மன்னார் பொலிஸார் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து தடை உத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

போராட்டக்காரர்கள் என அடையாளப்படுத்தி சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் பொலிஸார் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர். சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் ,அருட்தந்தை மார்க்ஸ் அடிகளார் உள்ளடங்கலாக 10 பேருக்கு எதிராக இந்தத்தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவின் கீழ் மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டம் மேற்கொள்ளாமல் இருத்தல் வேண்டும், எந்தப் பொதுச் சொத்துகளுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தக்கூடாது, மிக முக்கியமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஓரியன் மினரல் நிறுவனத்தின் செயல்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுத்த கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 நாள்களுக்கு வலுவுள்ளதாகக் காணப்படும் எனவும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-56)

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை இரத்துசெய்தல் மனு விசாரணைக்கு!

கொழும்பு,பெப்.19

பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் பதவியை இரத்துசெய்யும் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

பொதுஜன பெரமுன நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேரா இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பதில் சொலிசிட்டர் இந்த மனுவை விசாரணைக்கு எடுக்காமல் தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிட்டார். தான் விரும்பிய ஒருவரைப் பிரதானியாக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு எனப் பதில் சொலிசிட்டர் எடுத்துரைத்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஷ்வ பெரேரா இங்கு பிரதானியாக நியமிக்கப்பட்டது அல்ல பிரச்சினை குறித்த அமைச்சர் அமைச்சராக ஆசனத்தில் அமர்வதற்கோ, வாக்களிப்பதற்கோ தகுதியற்றவர் என வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதிகள் மார்ச் 18ஆம் திகதி இருதரப்பினரையும் தமது சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு உத்தரவிட்டுள்ளனர். (ச-33-6)




## தேர்தல் செயற்றிட்டங்கள் தெளிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.19

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் பங்கேற்று தெளிவூட்டல்களை முன்வைத்தார்.

நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நீதி) சட்டத்தரணி சிந்தக குலரத்ன, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ்.அச்சுதன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-33,25-27,66)





## பாடகர்களுக்கு யாழில் களம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். இசைக் கலையகத்தின் ஏற்பாட்டில், "சிலோன் சிங்கர் செலக்சன்" கரோக்கி இசை மூலமான பாடகர் தெரிவுப்போட்டி, கலையகத்தின் தலைவர் சிறில் ரவிசங்கர் தலைமையில் மடத்தடி கலைத்தூது மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 16 தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலராகவும் இருக்கவேண்டும்.

வருகைதருவோர் தமது சுயவிவரக்கோவையில் பிறப்புச்சான்றிதழ் பிரதியுடன் பாஸ்போட் அளவிலான படம் ஒன்றையும் இணைக்க வேண்டும். ஒருவர் ஒரு பாடல் மட்டுமே பாடலாம். பாடல் விபரம் முன்னதாக வழங்கப்படவேண்டும். மேலதிக விபரங்களுக்கு 0779154159 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஏப்ரல் பொருத்தமானதல்ல!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.19

ஏப்ரல் மாதம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது அனைவருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும். நியாயமான காரணிகளைக் கருத்திற்கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு சிறந்த தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி அதிகாரசபை (விசேட ஏற்பாடுகள்) சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வரவு செலவுத் திட்டம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டு 21 நாள்கள் விவாதிக்கப்படும். ஏப்ரல் மாதத்தில் சாதாரணதரப் பரீட்சை நடைபெறவுள்ளது. ஏப்ரல் மாதம் நடப்பகுதியில் தேர்தலை நடத்துவது அனைவருக்கும் நெருக்கடியானதாக அமையும். ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கு அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (எ-இ)

## வாய்ப்பாடு வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். இந்துக்கல்லூரியின் 'ஆற்றல்' பெருக்கல் வாய்ப்பாடு வெளியீட்டு நிகழ்வு, கல்லூரியின் முதல்வர் இ.செந்தில்குமார் தலைமையில் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நாளை வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளர் தி.ஆயவன், சிறப்பு விருந்தினராக உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நளின்!

யாழ்ப்பாணம்,பெப்.19
கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக எ.நளின் தர்சன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றிய வெத கெதர, பதுளைக்குத் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அந்த இடத்துக்கு எ.நளின் நியமிக் கப்பட்டுள்ளார். (ச-33-27)

# எமது உறவுகளுக்கு நீதி கானல்நீரே!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்

**கிளிநொச்சி,பெப்.19**
**9 ஆண்டுகளாக எங்களுடைய பிள்ளைகளை மீட்பதற்கு பல்வேறு வழிகளிலும் போராடி சர்வதேசத்துக்கு உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறிவரும் நிலையில் எமக்கான நீதி கிடைப்பது சாத்தியமற்றதொன்றே என்று வடக்குக், கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி யோ.கனகரஞ்சினி தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமது பிள்ளைகளைத் தேடிய 300 க்கும் அதிகமான தாய் ,தந்தையர் இறந்துள்ளனர். உள்ளூரில் எமக்குத் தீர்வு கிடைக்காத நிலையில் ஜெனீவா கூட்டத்தொடரிலும் பிரச்சினைகளை முன்வைத்துவருகின்றோம்.
இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதாகச் சொல்லி கால இழுத்தடிப்பே எமக்கு எஞ்சுகின்றது.
இவர்கள் தெற்குக்கு ஒரு நீதியும் வடக்குக்கு ஒரு நீதியும் வழங்குகின்றனர். எனவே இந்த ஒன்பதாவது கூட்டத் தொடரிலாவது ஜனாதிபதி சர்வதேசத்தின் கோரிக் கையை ஏற்று நீதியைப் பெற்றுத்தருவதற்கு முன்வர வேண்டும். எதிர்வரும் 20ஆம் திகதியுடன் கிளிநொச்சியில் நாம் தொடர் போராட்டத்தை ஆரம் பித்து ஒன்பது வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் நீதி வேண்டிய போராட்டம் ஒன்றை அன்றையதினம் மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ச-33-27,113)

## கண்காட்சி

பளை, பெப். 19
மகளிர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'ஆடைவடிவமைத்தல், அழகுக்கலை மனைப்பொரு ளியல்' கண்காட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடை பெறவுள்ளது. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் தலைவர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெ றவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. உமாபாலன், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தலைவர் செ. நாகசெல்வம் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (ச-25-9)



## மணப்பெண் அலங்காரம் யாழில் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், பெப்.19
யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையில் ரில்கோ விருந்தினர் விடுதியில் இந்து மணப்பெண் அலங்காரப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ள தாக அழகுக் கலை நிபுணர் அனுஷா ராஜமோகன் தெரிவித்துள்ளார்.
வடக்கிலுள்ள அழகுக்கலைத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் முதல் கட்டமாக இந்தப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.
இந்தப் பயிற்சிப்பட்டறையில் தெரிவுசெய்யப்படும் 10 பேருக்கு இலவ சமாகப் பயிற்சி அளிக்கவுள்ளோம்.
தொடர்ந்து வரும் காலங்களில் தொழில் முறையான மொடலிங் பயிற்சியையும் வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-41-20)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப் .19
இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல் லுநர் திறனாய்வுப் போட்டியும் செயற் பட்டு மகிழ்வோம் நிகழ்வும் பாட சாலை மைதானத்தில் நாளைமறுதி னம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது .
நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங் கில பாட உதவிக் கல்விப் பணிப்பா ளர் ப.சுதர்சன்கலந்து கொள்ளவுள் ளார். (ச-22, 159)


## மாணவர் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கலும்

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செய லக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரின் ஏற்பாட் டில், ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மனைப் பொருளியல் ஆகிய பயிற்சிகளை நிறைவுசெய்த மாணவர்களின் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் திக்கம் கலாசா மத்திய நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிர தம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் தர்சினி உருத்திர கோடீஸ்வரன் கலந்துகொண்டார். (ச-25-66)









## கோடாவுடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் 20 லீற்றர் கோடாவுடன் 55 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட் டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. (ச-41-27)

## பளையில் பெற்றோல் குண்டுத்தாக்குதல்

கிளிநொச்சி, பெப். 19
பளை தம்பகாமம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்க ளால் பெற்றோல் குண்டு தாக்கு தல் நடாத்தப்பட்டுள்ளது.
இதில் வீட்டின் பல பகுதிகள் தீக்கி ரையாகி உள்ளன.
சம்பவம் தொடர்பில் பளை பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

வாசித்தல் மற்றும் மேலும் மேலும் அதிக அறிவைப் பெறுதலை விட சிறந்தது எதுவும் இல்லை.


– ஸ்டீபன் ஹாக்கிங் –

# தேர்தலுக்கு அவசரப்படும் அரசு

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் தேர்தல் சட்டம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவால் சான்றுரைப் படுத்தப் பட்டுள்ளது. ஆகையால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குரிய பணிகளை இனிமேல் தடையின்றில் மேற் கொள்ளமுடியும். சட்டச் சிக்கல்கள் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல் பணிகளை முன்னெடுக்க முடியாதிருந்த தேர்தல்கள் ஆணைக்குழு, விரைவில் தேர்தலுக்கான அறிவிப்புகளை விடுக்கும் என்று எதிர்பார்க்கலாம். பெரும்பாலும் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் நடக்கும் என்பது ஊகிக்கக்கூடியதாக இருக்கும் நிலையில், தேர்தலைச் சில வாரங் களாவது பிற்போட வேண்டும் என்கின்றன எதிர்க்கட்சிகள்.

நடக்கவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் அரசாங்கத்துக்கும் சரி, எதிர்க்கட்சிகளுக்கும் சரி முக்கியமான ஒன்றாகவே இருக்கின்றது. எதிர்கால அரசியல் நகர்வுகளுக்கான அத்திவாரத்தை உருவாக்கிக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் உள்ளூராட்சி சபைகளைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியமானது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அந்த வெற்றியைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கும். அதேபோன்று கடந்த தேர்தல்களில் தோல்வியைச் சந்தித்த பிரதான கட்சிகளும், ஏனைய கட்சிகளும் உள்ளூராட்சி சபைகளைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் ஊடாக தங்களின் அரசியல் மீள் எழுச்சியைத் திட்டமிட முடியும் என்பதாலும், எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தல் வெற்றிக்கு உள்ளூராட்சி சபைகளின் பங்களிப்பு அவசியம் என்பதாலும் இந்தத் தேர்தலில் அதிக கவனம் செலுத்தும். தங்களுக்கு இப்போதுள்ள ஆதரவு அலை தணிவதற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடந்தி, பெரும்பான்மையான உள்ளூராட்சி சபைகளைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஆளும்கட்சி திட்டமிடுகின்றது என்று தெரிகின்றது. அதனாலேயே சூட்டோடு சூட்டாக சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான முட்டுக்கட்டைகளை நீக்கியிருக்கின்றது. ஆனால் ஏப்ரல் மாத இறுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. இந்தத் தேர்தலை ஓரிரு வாரங்களாவது பிற்போட வேண்டும் என்று கூறும் எதிர்க் கட்சிகள், அதற்குக் காரணமாக தற்போது நடைபெற்று வரும் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதங்கள், ஏப்ரல் மாதத்தில் நடக்கவுள்ள சாதார ணதரப் பரீட்சை என்பவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதிவரையில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், சமகாலத்தில் வேட்புமனுத் தாக்கல் அறிவிக்கப்பட்டால் வரவு -செலவுத் திட்ட விவாதங்களில் கலந்துகொள்ள முடியாது போகும் என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு. அதேபோன்று சாதாரணதரப் பரீட்சைகளுக்கு மத்தியில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளமுடியாது என்பது அவற்றின் மற்றுமொரு விவாதம். ஆனால் அரசாங்கத் தரப்போ எதிர்க்கட்சிகளின் இந்த நிலைப்பாடு, அரசியல் நோக்கம் கொண்டது என்று விமர்சித்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தலை எதிர்கொள்ள முடியாது எதிர்க்கட்சிகள் கூறும் நொண்டிச் சாக்கு இது என்று பிரதமர் உட்பட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் விமர்சிக்கின்றனர்.அரசாங்கம் கூறுவது போன்று எதிர்க்கட்சிகளின் இந்தக் கோரிக்கை அரசியல் நோக்கம் கொண்டு என்று வைத்துக்கொண்டாலும், அவர்கள்கூறும்காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கின்றன. அந்தக் காரணங்களை ஆய்ந்தறிந்து தேர்தல் திகதியைத் தீர்மானித்து, தேர்தல் ஓரிருவாரங்கள் தள்ளிவைக்கப்படுவதால் பாதகங்கள் ஏதும் நேர்ந்துவிடப் போதில்லை. எதிர்க்கட்சிகளின் அனைத்துக் கோரிக்கைகளையும் அரசியல் கண்ணோட்டத்தோடு பார்த்து ஒதுக்கிவிடாது, அந்தக்கோரிக்கைகளில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டு செயற்படுவதே சிறப்பானது. உள்ளூராட்சித் தேர்தல் விடயத்திலும் அரசாங்கமும், தேர்தல் ஆணைக்குழுவும் எவரையும் பாதிக்காதவண்ணம் தீர்மானங்களை எடுப்பதே நல்லது.




இலங்கைக்கு கடனுதவி

## ஐ.எம்.எப். நிறைவேற்றுசபை எதிர்வரும் 28இல் கூடுகிறது

**கொழும்பு, பெப். 19**

**இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான மூன்றாவது மீளாய்வு தொடர்பில் பரிசீலிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுசபை எதிர்வரும் 28 ஆம் திகதி கூடவுள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையின் எதிர்வரும் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பணியாளர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டியது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை மூன்றாவது மீளாய்வைப் பரிசீலித்து அங்கீகரிக்குமாயின் இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காவது தவணையாக மேலும் 333 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## புளி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டில் பழப் புளியின் விலை திடீரென சரிவடைந்துள்ளது. கிலோ 2 ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்ட புளி தற்போது 1000 ரூபாவாகக் குறைந்துள்ளது. புளியின்விலை மேலும் சரியலாமென்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (ச-25,17)

## 25ஆம் திகதி கூடுகிறது கோபா குழு

புதிய அரசாங்கத்தின் கோபா குழுவின் முதல் கூட்டம் கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி கூடவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு கொழும்பு மாநகர சபையின் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.


2023 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைகள் மீதான விவாதங்களும் அன்றைய தினம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சா/தரப் பரீட்சை மீள்மதிப்பீடு பெறுபேறுகள் வெளியீடு

யாழ்ப்பாணம்.பெப். 19

2023 (2024) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk க்குச் சென்று, பரீட்சை இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## எரிபொருளுக்கான வரி குறைக்கப்படும்

கொழும்பு, பெப். 19

எதிர்காலத்தில் எரிபொருளுக்கான வரி குறைக்கப்படும் என ஆளுங் கட்சியின் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாய்மொழி மூல கேள்வி பதிலுக்கான நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உரிய முறையில் வரிக்குறைப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தற்போது வழங்கப்படக்கூடிய அனைத்து சலுகைகளையும் வழங்கியுள்ளோம்.

புதிதாக எந்தவொரு வரியும் விதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



நாளை
வியாழக்கிழமை - மாசி - 06
20.02.2025
சுபநேரம் : 12.33 - 02.03
ராகுகாலம் : 08.03 - 09.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்கள்...

ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுப் பாடசாலைகளுக்குச் சென்றுவரும் ஆசிரியர்களின் பேருந்து நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) தனியார் சிலருடன் இணைந்து போக்குவரத்துப் பொலிஸாரால் பரந்தனில் வழிமறிக்கப்பட்டுள்ளது. இதன்போது வாகனச் சாரதி உள்ளிட்ட ஆசிரியர்கள் சிலர் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்துப் பிரச்சினைகளுக்காகத் தாம் இவ்வாறு வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்றுவருவதாகத் தெரிவித்தபோதும் பொலிஸார் அவ்வாறு செல்லமுடியாது என்று தெரிவித்து தண்டம் விதித்துள்ளனர்.
குறித்த பொலிஸாரின் அடாவடித்தனத்தின்போது வேறு நபர்கள் சிலர் அருகில் இருந்ததாகவும், அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே ஆசிரியர்கள் பயணித்த வாகனத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். பொலிஸாரின் இத்தகைய முறையற்ற செயற்பாடுகளின் பின்னணியில் சிலர் செயற்பட்டிருந்த நிலையில் இன்று (நேற்று) மாலை முல்லைத்தீவிலிருந்து ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் பளைப் பகுதியில் வைத்துக் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
நேற்றைய (நேற்றுமுன்தினம்) பொலிஸாரின் செயற்பாட்டுக்கும், ஆசிரியர்கள் மீதான இன்றைய (நேற்றைய) தாக்குதலுக்கும் தொடர்புள்ளதாகவே சந்தேகம் எழுகின்றது. இதுகுறித்து வடக்கு ஆளுநர் உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு குறித்த குற்றத்தைப் புரிந்தவர்களும், உடந்தையாகச் செயற்பட்டவர்களும் உடனடியாக கைதுசெய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.
வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் ஆசிரியர்களின் போக்குவரத்து மற்றும் விடுதி வசதிகள் குறித்து எந்தவொரு கரிசனையும் அற்றுச் செயற்படும் அரசாங்கம் ஆகக்குறைந்தது ஆசிரியர்கள் பாதுகாப்பாகச் சென்றுவருவதற்கேனும் ஆவன செய்யவேண்டும். பொலிஸார் முறையற்ற வகையில் செயற்படுவதையும், ஏனையவர்களுக்கு முறையற்ற வகையில் உடந்தையாகச் செயற்படுவதையும் கட்டுப்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 04 . 1951



மறைவு
16 . 02 . 2025

### சுந்தரம் சுபத்திராதேவி

(இளைப்பாறிய ஆசிரியை - யா / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)

உரும்பிராய் கிழக்கு, அரச வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சுபத்திராதேவி (இளைப்பாறிய ஆசிரியை - யா / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி) கடந்த 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - சிவபாக்கியவதி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், நாகமுத்து சுந்தரம் (இளைப்பாறிய பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர், தபால் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், சுஜிதா (ஆசிரியை - யா / உரும்பிராய் இந்துக் கல்லூரி), சுஜன் (Double - S நிர்மாண ஒப்பந்தகாரர், உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரமணிதரன் (ஆசிரியர் - யா / கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), விஜயதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யா/ ஊரெழு கணேசா வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், ரதுக்ஷன், தக்ஷஜா, கென்சிகா, தசாரா, டாருகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுகுணதேவன் (கனடா), சுசீலாதேவி (கனடா), சுகுணராஜன் (கனடா), பாலாம்பிகை (கனடா), ஜெகதாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2025) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
சுஜிதா - 074 131 3388
சுஜன் - 077 239 7211

தகவல்
குடும்பத்தினர்

(cs.57546) (N-1)

## தேர்தல்...

உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டம் சபாநாயகரின் சான்றுப்படுத்தலுடன் நேற்றுமுன்தினம் மாலை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதலால், எப்போது வேண்டுமானாலும் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என்ற நிலையிலேயே, மார்ச் மாதம் 31ஆம் திகதிவரை தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை விடுக்கக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேரில் வலியுறுத்தியுள்ளன.
மார்ச் மாதம் 21ஆம் திகதிவரை நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதங்கள் இடம்பெறவுள்ளன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் இருந்தால்தான் பட்ஜெட்டின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். இவ்வாறிருக்கையில், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை துரிதமாக வெளியிட்டால், அது முறையான தேர்தல் நடவடிக்கைக்குப் பொருத்தமானதாக இருக்காது என்றும் எதிர்க்கட்சியினர் தேர்தல்கள் திணைக்களத்தினரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுக்கும் பட்சத்தில், அது பட்ஜெட்டின் குறைபாடுகள் பொதுமக்களுக்குத் தெரியவராத நிலையை ஏற்படுத்தும். அல்லது பட்ஜெட்டுடன் எதிர்க்கட்சிகளை முடக்கிவைக்கும் விதமாகவும் அமையும். எனவே, நிலைமையின் தீவிரத்தை தேர்தல்கள் ஆணைக்குழு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளன. (அ-ம-இ)

## வங்கிப்...

அரச வங்கியில் நிலையான வைப்பிலிட்ட பணத்தை, தவறாகக் கையாண்டு மோசடி செய்த முகாமையாளர் ஒருவர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
கோப்பாய் பிரதேசத்தில் இயங்கிவந்த அரச வங்கியொன்றின் முன்னாள் முகாமையாளரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
அவருக்கு எதிராக, பணத்தின் உரிமையாளரால் (நிலையான வைப்பிலிட்டவரால்) யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அந்த முகாமையாளர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## தமிழ்...

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
எங்களின் துயரத்தின் அளவு குறித்து உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியதில்லை என நாங்கள் கருதுகின்றோம். இந்தநாடு ஆட்சிசெய்யப்படும் முறையை மாற்றுவதற்காக, இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான தோழர்களை இழந்த புரட்சிகர அரசியல் பாரம்பரியத்தால் வளர்க்கப்பட்டவர் நீங்கள். இதன் காரணமாக மிகவும் கொடுமையான மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட துயரமான வரலாற்று அனுபவம் உங்களுக்கு உள்ளது.
இலங்கைத் தமிழ் மக்களாகிய நாங்கள் வன்முறைக் கலாசாரம் மற்றும் ஆயுத மோதல்கள் மீது விருப்புக்கொண்டவர்கள் அல்லர். பேராசையும் புரிந்துணர்வும் இல்லாத சிங்கள ஆட்சியாளர்களால் நாங்கள் அவ்வாறான மோதல்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். எங்கள் இளம் தலைமுறையினர் அரசியல் கொள்கைகளுக்காகப் போராடினார்கள். சொத்துச் சேர்ப்பது, ஏனைய மக்களினத்தை அடிபணியச்செய்வது போன்ற பேராசை நோக்கங்களுக்காக அவர்கள் போராடவில்லை.
அரசியற்கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை நாங்கள் பெரும் நம்பிக்கையுடன் சமர்ப்பிக்கின்றோம். உங்களுடைய தீர்மானம் தங்கள் நேசத்திற்குரியவர்களுடன் சேர்வதற்காக பல வருடங்களாக காத்திருக்கும் பெற்றோரினதும் குடும்பத்தவர்களினதும் கண்ணீரை நிறுத்தும் வகையில் அமையவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## டிப்பர்...

சைக்கிள் மற்றும் டிப்பர் என்பன மோதியதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-66-125-20-27)

## சிறீதரனை...

தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கிய அரியநேத்திரனுக்கு எதிராக கட்சி முடிவெடுத்து அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்திவிட்டது. அது தொடர்பில் எழுத்துமூலம் அவருக்கு அறிவிக்கப்படவுள்ளது.
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மத்திய குழுவில் பரிசீலிக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தான் பொது வேட்பாளருக்குத்தான் ஆதரவு வழங்குவேன் என்று கூறியிருந்தார். அதாவது தனது முடிவை - நிலைப்பாட்டை அவர் வெளிப்படையாகக் கூறினார். கட்சிக்குத் தெரிவித்த பின்னரே, அவர் தனது ஆதரவை வெளிப்படையாக வழங்கியிருந்தார்.
எனவே, சிறீதரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது, கட்சியில் இருந்து அவர் விலக்கப்படவுள்ளார் என்று வெளிவரும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. சிறீதரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எண்ணமோ, அல்லது சிறீதரனை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாடோ எவருக்கும் இல்லை - என்றார். (அ-ம-125-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15.09.1978



மறைவு
14.03.2023

கடந்த 14.03.2023 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் நடராசா கஜந்தன்

(ஸ்தாபகர் உரிமையாளர்- நியூ மைதிலி ஜுவலர்ஸ்,
சந்தோஷ் ஜுவல்லறி)

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டி
வழி வகுத்த தானைத்தலைவா
உங்கள் பிரிவு எமக்கு பேரிழப்பாகினும்
இயற்கையின் நியதி அதுவன்றோ
நீங்கள் இறைபதமடைந்து இரண்டாண்டாகினும்
நாங்கள் இன்னும் ஆறாத சோகத்தில்
துயர் தீராது, மாறாது, மறையாது
தங்களின் ஆன்மா மறுபிறப்பின்றி
அமைதிகாணும் என அமைதியடைவோம்

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளான
இன்று (19.02.2025) புதன்கிழமை சந்நிதியான்
ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை -
செல்வச்சந்நிதி தொண்டமானாறில்
அன்னதானம் இடம்பெறும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்







நியூ மைதிலி
ஜுவல்லர்ஸ்
இல. 38,40,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சந்தோஷ்
ஜுவல்லறி
இல. 97A,99V,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

"சந்தோஷ் மஹால்"
குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்.
இல.270, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

## யாழில் கைதான பொலிஸ்அலுவலரின் வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு!

யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் வைத்து, லஞ்சம் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேரடியாகக் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. குறித்த வழக்குத் தொடர்பில் கொழும்பு புதுக்கடை மேல் நீதிமன்றில் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் குற்றப் பகர்வுப் பாத்திரம் தாக்கல் செய்யப் பட்டுள்ளமையால் புதுக்கடை 1ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றில் இவ்வழக்கை முடிவுறுத்துமாறு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கோரப்பட்டதனை அடுத்து குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ம-66)

**MEDI HELP HOME CARE SERVICE**

எமது சேவை நிலையத்தினால் சகல ஆண்/பெண் நோயாளர்களும் தேர்ச்சி பெற்ற (Care givers) பராமரிப்பாளர்களால் சிறந்த முறையில் கரிசனையுடன் பராமரிக்கப்படுவர்.

தொடர்பு: 076 252 5725

# Accounts Assistant

- Fully / Partly Qualification of any professional accounting body/ Bachelor's Degree in Finance, accounting or a related field.
- Minimum 01 year working experience
- should be competent in microsoft excel, word and e-mail.
- Age below 30 years.

Contact
**070 770 4527**

# We are Hiring

## Receptionist

- Age 18 - 25
- Pleasant apperance
- Exxcelent Communication Skills & Spoken English is a must.
- Good Computer Literacy
- G.C.E, O/L Passed

Contact:
**070 745 8567**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 09 . 1947 | 15 . 02 . 2025 |



## சின்னராசா தெய்வநாயகி

மூளாய் காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், மூளாய் வீதி வட்டுக்கோட்டை மற்றும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா தெய்வநாயகி அவர்கள் கடந்த 15.02.2025 சனிக்கிழமை டென்மார்க்கில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும், சுரேஸ்குமார், நகுலாம்பாள், அருள்நாயகி, பத்மினி, றஜனி, கிருஷ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வடிவாம்பிகாதேவி, சிவானந்தா, காலஞ்சென்ற சிறிரங்கநாதன் மற்றும் தியாகராஜா, சுதாகரன், நித்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகநாதன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் கணேசநாதன், சற்குணானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுகந்தன், சுதர்சன், யசோதரன், கார்த்திகா, லக்ஷிகா, பிரவீன், துவாரகை, சுவேதினி, ஜனார்த்தனன், நிவேதன், அனிஷ்கா, தாருஜா, ரவிக்குமார், சந்தோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2025) வியாழக்கிழமை டென்மார்க் Viborg Kapel இல் முற்பகல் 08.15-11.00 மணிக்கு (டென்மார்க் நேரம்) இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல் :குடும்பத்தினர்.
சி.சுரேஸ்குமார் (மகன்) டென்மார்க்
+4525597469
சி.யசோதரன் (பேரன்) இலங்கை
077 087 2688

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(CR 44357) P-1

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 12 . 1963 | 14 . 02 . 2025 |



## திருநாவுக்கரசு தவேந்திரன் (தவம்)

யாழ். பிறவுண்வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா/ மொன்றியாலைப் வதிவிடமாகவும் கொண்ட தவம் என்றழைக்கப்படும் தவேந்திரன் கடந்த 14.02.2025 வெள்ளிக்கிழமை மொன்றியாலில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் திருநாவுக்கரசு-தனலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற Augustine மற்றும் சரோஜினி (மொன்றியால்) தம்பதியின் அன்பு மருமகனும், Janet (சித்திரா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், Asmina, Goldwin ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜேந்திரன் (ராஜேந்திரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) பாலேந்திரன் (கனடா) இந்திராஜோதி (கொழும்பு), ரவீந்திரன் (கனடா), சந்திரவதனி (கனடா), சுகந்தமலர் (கனடா), வசந்தமலர் (கனடா), ஞானேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக Urgel Bourgie 3955 Cote de Liesse, St-Laurent H4N 2K7 அமைந்துள்ள Funeral Home,இல் 23.02.2025 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 02.00 மணி முதல் இரவு 09.00 மணி வரையும் மறுநாள் 24.02.2025 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரிகைகள் நடைபெற்று பிற்பகல் 02.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
மனைவி (சித்திரா) - 514 983 8749.
மைத்துனர் (Richmond) - 514 941 3589.
Ganesha party palace - 514 747 9392.

(CS/29821) P-1

# 31ஆம் நாள் அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 04 . 1973 | 20 . 01 . 2025 |



**கடந்த 20.01.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்**

## அமரர் சண்முகம் சஷிஹரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.02.2025) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் வரணியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இடைக்குறிச்சி,
வரணி.

குடும்பத்தினர்

(CS/29819) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த
சிந்தனையின்
ஒளியானது,
பணத்தைவிட அதிக
மதிப்பினை உடையது.
- தோமஸ் ஜெபர்சன்

புதன் பொய்கை


19.02.2025
புதன்கிழமை



# யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கும் துரித உணவகங்கள்

ஆழ்வார்

அண்மைக்காலமாக துரித உணவு வழங்கும் சர்வதேச வணிக நிறுவனங்கள் பல, யாழ்ப்பாணத்தை இலக்கு வைத்து தமது விற்பனைக் கூடங்களைத் திறப்பதை அவதானிக்கமுடிகின்றது. மிக நீண்டகால அசாதாரண நிலைமைகளுக்குப் பின்னர் இவ்வாறான வணிக ரீதியான உள்வருகைகள் மிகையாக அதிகரித்திருக்கின்றன. அத்துடன், மேலும் பல புதிய வணிகங்கள் உள்நுழைவற்கான அதிகளவு சாத்திய நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமையானது உள்ளூர் உணவு வணிகங்களுக்கு பலமானதோர் சவாலான விடயம் என்றால், அதில் மாற்றுக் கருத்தில்லை.



உணவு வழங்கல் என்பதை ஒரு 'சேவைத் துறை' என்றே கொள்ளமுடியும். இன்று அது உலகளாவிய ரீதியில் பல புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன் ஒருங்கிணைந்து, போட்டித்தன்மையுடனும், பணம் உழைக்கும் முதன்மை நோக்குடனும் மிளிர்கின்றது. போர் தின்றுதீர்த்த பூமியில் இவை புதியனதான். அவற்றின் விலையோ விண்ணைத் தொடுகின்றன. ஒரு மாற்றத்துக்காக இவ்வகை உணவுகளை சுவைக்கலாமேயன்றி, நாம் அன்றாடம் உண்ணும் நமது பாரம்பரிய உணவுகளுக்குப் பதிலீடாக இவற்றைக் கொள்ளமுடியாது. பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு, ஆடம்பரமான வகையில் பல விளம்பர உத்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களுக்கு 'திணிக்கப்படும்' இவ்வகை உணவுகளின் ஊட்டச்சத்துக்கள் தரமாக இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. நாவுக்கு சுவையாக மட்டுமே தயாரிக்கப்படுவதுடன், விளம்பர உத்திகளில் மட்டுமே அவற்றின் வணிக ரீதியான வெற்றி தங்கியுள்ளது. எமது சிறுதானிய உணவு வகைகளிலுள்ள குறைந்தபட்ச ஊட்டச்சத்துகள் கூட இவ்வகை உணவுகளில் நிச்சயமாக இருக்கப்போவதில்லை.

## பலவீனமும் பலமும்

உணவுத் தயாரிப்பில் அதிகளவு சுகாதாரம் பேணுதல், கனிவுடன் கூடிய சிறந்த வாடிக்கையாளர் சேவை, எப்போதும் மாறாத சுவை, நிறைவான தரம் மற்றும் உணவுத் தயாரிப்பில் நிபுணத்துவமும், நிறைந்த அனுபவமும் கொண்ட ஆளணி போன்றன இவ்வுணவு வகைகளின் மிகப்பலமான அம்சங்களாகும். இவ்விடயத்திலேயே எம்மவர்களது உள்ளூர் வணிகங்கள் மிகவும் பெரியளவில் சவால்களை எதிர்கொள்ள இயலாத நிலையில் பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இங்குள்ள பல உணவகங்களில் 'சுகாதாரம்' என்பது மிகவும் பற்றாக் குறையாகவே இன்னமும் உள்ளது.

இன்று அநேகமாக உள்ளூர் உணவகங்களில் சமையலறைப் பகுதி மிகமோசமான அசுத்தங்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. பணியாளர்கள் நிலை அதைவிடவும் மோசம். வாடிக்கையாளர்களிடம் அணுகும் விதம் கேள்விக்குறி. பல இடங்களில், உணவருந்த வருகைதரும் வாடிக்கையாளர்கள் அதிக நேரம் காத்திருந்து உணவருந்தாமல் வெளியேறும் சம்பவங்களும் நிகழ்கின்றன. இவைபோன்ற இன்னும் பல குறைகள் நம்மவர்களது வணிகங்களுக்கு மிகவும் பலவீனமான அம்சங்களாக உள்ளதுடன், புதிதாக கால்பதிக்கும் மேற்கூறப்பட்ட சர்வதேச வணிகங்களுக்கு 'மிகப் பலமான' சாதகமான வாய்ப்பையும் எம்மவர்களின் பலவீனங்களே ஏற்படுத்தி விடுகின்றன.

**பெருந்தொகை பணத்தைச் செலவிட்டு, ஆடம்பரமான வகையில் பல விளம்பர உத்திகளைக் கையாண்டு வாடிக்கையாளர்களுக்கு 'திணிக்கப்படும்' இவ்வகை உணவுகளின் ஊட்டச் சத்துக்கள் தரமாக இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. நாவுக்கு சுவையாக மட்டுமே தயாரிக்கப்படுவதுடன், விளம்பர உத்திகளில் மட்டுமே அவற்றின் வணிக ரீதியான வெற்றி தங்கியுள்ளது.**



## தர மேம்பாடு

எதிர்காலத்தில் மேலும் பல சர்வதேச அளவில் பிரபலமிக்க உணவுத் தயாரிப்பு வணிகங்கள் இங்கு தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது அவை எமது உள்நாட்டு வணிக முயற்சியாளர்களுக்கு பாரிய பின்னடைவை வழங்கும். அத்துடன், எம்மவர்கள் துறைகளைவிட்டுத் தூரமாகச் செல்லவும் வாய்ப்புகளை அது ஏற்படுத்தும். இங்குள்ள ஒருசில வணிகங்கள் விலக்காக உள்ளபோதிலும் ஒட்டுமொத்தமாக நோக்கினால் நம்மவர்கள் தமது தற்போதைய நிலையிலிருந்து மேலும் மேம்பட்ட நிலைக்கு உயரவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வாடிக்கையாளர்கள் விரும்பும் உணவு வகைகளுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், அவற்றினை விசேட சுவையுடன் தயாரிக்கும் திறன் எதிர்காலத்தில் மிக அவசியம். பல உணவகங்கள் இற்றைவரை வரையறுக்கப்பட்ட வழக்கமான சில உணவுப்பண்டங்களை மட்டுமே வழங்குவதுடன், அவற்றில் மேலும் பல வகையான மாறுபட்ட சுவைகளில் தயாரிப்பதற்கு முன்வருவதில்லை. தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்திலுள்ள பல உணவகங்களில் பல சுவைகளுடன் கூடிய விதவிதமான உணவுவகைகள் தயார்ப்படுத்தி வாழை இலை மற்றும் இயற்கையான இலைகளில் பரிமாறப்படுகின்றன. இது அங்கு சுற்றுலாத்துறைக்குக்கூட பலம் சேர்க்கின்றது என்பதை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

அசைவ உணவகங்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்கவேண்டியுள்ளது. மாமிச உணவுகளின் தரம், சுகாதாரமற்ற வகையில் அவை சமையலறையில் கையாளப்படும் செய்முறை, பணியாளர் சுகாதாரம் போன்ற உணவுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் உணவகங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றன. உணவகங்களைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பிலுள்ள சுகாதாரத்துறை, பட்டும்படாமலும் தனது கடமையை ஆற்றுகின்றது. இதனால் முதலில் பாதிக்கப்படுவது நுகர்வோர்களே. இன்றையகாலம் போட்டிச் சூழல் நிறைந்த காலம். எனவே, எவ்வளவுக்கு எவ்வளவு நிறைவான சேவையை வளங்குவதற்கு எம்மவர்கள் முன்வருகின்றார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு உணவுப்பாதுகாப்பும், தொழில்துறை இருப்பும் உறுதிப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# குருநகரில் கோலாகலமான கலைவிழா!



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் புனித யோசவாஸ் இளையோர் மன்றத்தின் 3ஆவது கலை விழா குருநகர் கலையரங்கில் அண்மையில் மிகவும் சிறப்பாகவும், காண் போரைக் கவரும்படியாகவும் நடைபெற்றது.

இளையோர் மன்ற தலைவர் செல்வன் கிறகோரி ஜெயராஜ் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி அருளானந்தம் யாவிஸ் அடிகளாரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டார்.

ஆசிரியை திருமதி சுதர்சினி கரண்சனின் நெறியாள்கை யில் உருவான தில்லானா நடனமும், 'யூபிலி ஆண்டில் இறை திட்டம் தேடும் இளையோர்' எனும் தலைப்பில் வில் லுப்பாட்டும், ஆசிரிய ஆலோசகர் ஜோண்சன் ராஜ்குமாரின் எழுத்தில் உருவான கலை நிறைச்செல்வன் அரியநாயகம் அன்றுயூலியஸின் நெறியாள்கையில் உருவான விண் ணக வீரன் வடமோடிக்கூத்தும் மேடை ஏற்றப்பட்டு பலரது பாராட்டுகளைப் பெற்றன.

தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான கால்பந்தாட் டத் தொடரில் விளையாடிய குருநகரைச் சேர்ந்த ஜோன் ஜிம்றோன் கரிஷ் மற்றும் ரூபன் மதுமிதன் ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர், அத்து டன், அவுஸ்திரேலியா கிறிபித் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்துறையில் உயர் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலாநிதிப்பட்டம்பெற்ற ஜெயக்குமார் சமந்தா தாரணியும் கௌரவிக்கப்பட்டார்.







# மன்னார் மாவட்ட பொங்கல் விழா



லம்பேர்ட்



மன்னார் மாவட்ட பொங்கல் விழா வேட்டையா முறிப்பு அருள்மிகு ஆதிவிநாயகர் ஆலயசபையி னரின் ஏற்பாட்டில், வேட்டையா முறிப்பு விளை யாட்டு மைதானத்தில் அண்மையில் சிறப்புற இடம் பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம் ஆகியன நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தன.

இதன்போது சம்பிரதாய முறையில் 108 பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டது. தொடர்ந்து கும்மி நடனம் , பாரம்பரிய விளையாட்டுகள், கலைநி கழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

மாவட்ட இந்துசமய கலாசார உத்தியோகத்தர் அ.தனுஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ் வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந் தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ்.மன்னார் பிரதேச செய லாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேச செயலாளர் கே.சிவசம்பு, கௌரவ விருந்தினராக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பிரதம குரு கருணாநந்த குருக்கள் உள்ளடங்கலாக பலர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சேவைக்கு சிலர் தொடர்ந்து இடையூறு

## இன்று கலந்துரையாடல்!


யாழ்ப்பாணம், பெப். 19

சிறந்த போக்குவரத்துச் சேவை வழங்குவதற்கு இடையூறாகச் சில தனியார் பேருந்து உரிமையாளர்கள் உள்ளதாக வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்க நிர்வாகம் நேரடியாகச் சந்தித்து முறையீடு செய்துள்ள நிலையில், அது தொடர்பில் இன்று கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கத்தினரால் குறித்த சங்கத்தின் கீழ் பணி புரியும் 83 பணியாளர்களுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சங்க நிதியிலிருந்து சீருடை இனாமாக வழங்கப்பட்டது. இந்தநிலையில் இவர்களில் 8 தனியார் பேருந்து உரிமையாளர்கள் மாத்திரம் சீருடை அணியத் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிக்கும் அவர்கள் உடன்பட மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் இதுதொடர்பான முக்கிய கலந்துரையாடல் வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைத் தலைவரின் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ம-66)

# மே மாதம் வரை வெப்பம் தொடரும்



## வடக்கு உட்பட 16 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

**நாட்டில் கொழும்பு உள்ளிட்ட 16 மாவட்டங்களில் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை அவதானத்துக்குரிய மட்டத்தில் காணப்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இந்த வெப்பநிலை எதிர்வரும் மே மாதம் வரை நிலவக்கூடும்.

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலும், வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களிலும், வடமேல் மாகாணத்தில் குருநாகல், புத்தளம் மாவட்டங்களிலும், வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும், தெற்கில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும், சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலும் இவ்வாறு அதிகூடிய வெப்பநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வெப்பநிலையால் அதிகரிக்கும் உடல் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு குளிர் நீர், தோடம்பழம், இளநீர் உள்ளிட்டவற்றை சீனி சேர்க்காது எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் முடிந்தளவு பகல் வேளைகளில் வெளியில் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். (ச-இ)

# மெய்வன்மைப்போட்டி

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் இ.எழில் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு இடம்பெறவுள்ளது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜனும், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ப.தர்மசீலனும், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி வி.சுனில் ஆரியரட்ணவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ம.இராசேந்திராவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-131)

# நுளம்பு பெருகும் சூழல்; விற்பனையகத்துக்கு ‘சீல்’

நீர்வேலிப் பிரதேசத்தில் நுளம்பு பெருகக்கூடிய சூழலை வைத்திருந்த இரும்பு விற்பனையகமொன்று மறுசீரமைப்பு வரை ‘சீல்’ வைத்து மூடப்பட்டுள்ளது.

சுகாதப்பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குறித்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், சுகாதார வசதிகளை ஏற்படுத்தும்வரை விற்பனையகத்தை சீல் வைத்து மூடுமாறும் நீதிவான் பணித்துள்ளார். (ச-25, 17)


# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் நாகேஸ்வரன்

கரம்பனை பிறப்பிடமாகவும் புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நாகேஸ்வரன் நேற்று (18.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லதம்பி - இராசாத்தி தம்பதியரின் மருமகனும், கல்யாணியின் அன்புக் கணவரும், பிரசாத்தின் பாசமிகு தந்தையும், சத்தியபாமினியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், இராசரத்தினம் மற்றும் யோகேஸ்வரி, விஜிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2025) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 03.00 மணியளவில் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.94, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 11 . 1950



இறப்பு 17 . 02 . 2025

## நல்லையா பிலோமினா

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பிலோமினா அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை- இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்புக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையா அவர்களின் மனைவியும், றொசான் (லண்டன்), றொஸ்னி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திரா, ஞானசேகரம், யோகராஜா (கனடா), தேவபாலன் (லண்டன்), காலஞ்சென்ற யோகானந்தம், யோகலிங்கம், கிளாறம்மா, சந்திரலிங்கம், சின்னராசா, அருளானந்தம் ஆகியோரின் சகோதரியும், சானியா (கனடா), ஜெலீம்மேரிநாத் ஆகியோரின் அன்பு மாமியும், பெனிக்ஷன், நிதிஷா, ஜெரோமியன் ஆகியோரின் அன்பு பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (21.02.2025) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கொலைவிலக்கி ஆரோக்கிய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

186/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
076 154 6689

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2515) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பி. சாந்த கைதானார்

புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர மற்றும் அவரது மகன் ஆகியோர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட சொகுசுக் காரை மறைத்து வைத்திருந்த குற்றத்துக்காகவே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)


## சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு

உடுவில் மகளிர் கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை எடுத்து நடாத்துவதற்கு ஆர்வமுள்ளவர்கள் நேரில் வருகை தரவும்.


காலம் 25.02.2025 ற்கு முன்னர்.

நேரம் மு.ப 8.00 - பி.ப 2.00 வரை

அதிபர்

(CR/44355) J-1


## 28ஆம் ஆண்டு நினைவு



**மன்னார் வலைப்பாடு கடலில் சங்கமமான**

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) தோற்றம் :- 23.06.1974
திருச்செல்வம் கம்சினி தோற்றம் :- 05.06.1996
சிவலிங்கம் திருச்செல்வம் தோற்றம் :- 08.02.1972

மறைவு:-19.02.1997

பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் - என்றும் சிந்தையில் இருப்பர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
அக்கா, அத்தான்,
அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.

சி.திருப்பதி,
லண்டன்

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20.02.1939 — உதிர்வு 13.03.2015

### அமரர் சங்கரப்பிள்ளை கனகராசா

திதி: அபரபக்க ஸப்தமி
19.02.2025

அகிலம் விட்டு ஏகி எமை
ஆற்றொணா துயரில் ஆழ்த்தி
இன்றுடன் பத்தாண்டுகள்
ஈரைந்து ஆண்டுகளிலும்
உந்தன் நினைவுகள்
ஊசலாடாத நாட்களில்லை
எப்பிறப்பில் இனி காண்போம் என
ஏங்குகின்றோம் நாங்கள் இங்கு!
"கடல் வானம் கூட நிறம் மாறக் கூடும்
மனம் கொண்ட பாசம் தடம் மாறிடாது"

குடும்பத்தினர்


(cs 29810) (N-1)

# சிவராத்திரியை முன்னிட்டு கேதீச்சரத்துக்கு நாளை யாத்திரை

மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து மன்னார்த் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு பாதயாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது. நாளை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கவுள்ள யாத்திரை எதிர்வரும் 26 ஆம் திகதி திருக் கேதீச்சரத்தைச் சென்றடையவுள்ளது. பாதயாத்திரையில் பங்கேற்கவிரும்புவோர் 0776132176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-125,66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1949 — மறைவு 16 . 02 . 2025



### பேரம்பலம் கருணானந்தம்

**(ஓய்வுபெற்ற வரிமதிப்பீடாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் - கொழும்பு)**

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், கொழும்பு கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கருணானந்தம் (ஓய்வு பெற்ற வரிமதிப்பீடாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கொழும்பு) அவர்கள் கடந்த 16.02.2025 ஞாயிறுக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சத்தியவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர்கள் பேரம்பலம் - இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (ஓய்வு பெற்ற அதிபர்) - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், , பத்மநாதன் (கனடா) பரமேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், ராகுலன் (அவுஸ்ரேலியா), வினோதினி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா (அவுஸ்ரேலியா), ராஜ்சுதன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜன், சனோஜன், அஜந்தன், வான்மயி, ஆதித்யவர்மன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், குமரவேள் (ஓய்வு பெற்ற முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம்), விக்னராஜா (லண்டன்),நளாயினி, அமிர்தநாயகி, பங்கயச்செல்வி (ஆவுஸ்ரேலியா), புவனேஸ்வரி (நந்தா), புவனேஸ்வரி (மல்லிகா - கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சிவகுமாரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மற்றும் கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்), சுரேஷ்குமார் (அவுஸ்திரேலியா) புனிதவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), விமலினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும், சேயோன், ஸ்ரீவதனா (கனடா), கம்சா (கனடா), காலஞ்சென்ற தனுஜா (கனடா), மற்றும் ஜெயராம் (சுவிஸ்), ஹரிஜன் (சுவிஸ்), அரிஹரன், கோகுலராம், மாதங்கி, வீணாவாகினி, மதுராந்தகி, ஹரிஷ் (அவுஸ்ரேலியா) விதுஷா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பெரியப்பாவும், நிறுபிகா, கிறுபிகன், கலாஷ் (லண்டன்), சகாஷ் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.02.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (20.02.2025) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
குடும்பத்தினர்
011 256 5384

**26/7, 5வது ஒழுங்கை,**
**கொள்ளுப்பிட்டி.**

(CS/57544) J–1

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 12 . 1945 — மறைவு 16 . 02 . 2025



### கிட்ணர் சுப்பையா

யாழ். கோவிலாக்கண்டி மேற்கு வேலன்பிராயைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி அரசடி சந்தி நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணர் சுப்பையா அவர்கள் கடந்த 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணன் கிட்ணர் - பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பாலசிங்கம் - இராஜேஸ்வரி தம்பதியர் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் கௌரி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசம்மா, மற்றும் மனோன்மணி, லக்ஸ்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, முத்துலிங்கம் மற்றும் கந்தையா (செல்லத்துரை), காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதீஸ்வரன் (சுவிஸ்), சஜீவா (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சந்திரரூபன் (ஜேர்மனி), சஜீவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா (ஜேர்மனி), ரமேஸ்குமார் (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), சுமித்திரா (ஜேர்மனி), சுயித்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சயிவிதா, கிந்துஜன், கயானிகா (சுவிஸ்), தனுசியன், சயானிகா (ஜேர்மனி), டிலக்சனா, பாலகணேஸ், கிசோதிகா (ஜேர்மனி), நிசோக், நிபேஸ், நிகாஸ் (ஜேர்மனி), பிரீத்திகா, பிரவீன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20.02.2025) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

சதீஸ் - மகன் - +41 798 321 959, சிவராஜா - மருமகன் - +49 157 528 74352
சந்திரரூபன் - மகன் - +49 152 157 15087, சஜீவன் - மகன் - +49 157 581 59035
[illegible] - உறவினர் - +94 7666 24951, அகிலன் - உறவினர் - +94 766 846 982

(CS/57545) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாகவும், அதனை எவ்வாறு எதிர்கொள்வது? என்பது தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசி, அவர்களுடன் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து, தற்போதைய அரசியற்சூழலுக்கு அமைய நாம் ஒரு தேசிய இனமாகத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என இதன்போது தீர்மானித்துள்ளோம். அதனால் எமது தனித்துவத்தைப் பேணும்வகையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறேன்.

தமிழ்த் தேசியக் கட்சிகளை நாம் இன்று பலப்படுத்தவேண்டும். தனித்தனியாக ஒரு பொது இணக்கப்பாட்டுடன், சகதமிழ்க்கட்சிகளைத் தாக்காதும், அவர்களை எதிர்க்காமலும் போட்டியிடுவது தொடர்பிலும் தற்போது கலந்துரையாடிவருகின்றோம்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியல்களில் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றிலும், ஏனைய கட்சியினரையும் இணைத்து போட்டியிட நாம் தயாராக உள்ளோம். உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசிய கட்சியாக நாம் ஒன்றிணைந்து கைப்பற்றவேண்டும். வடக்கு கிழக்கு மக்களாகிய நாம் எமது இனம் சார்ந்து எங்களின் இருப்பைத் தக்கவைக்க வேண்டும் - என்றார். (அ-ம-20-125)

## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பளை, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள போத்தலில் கள் அடைக்கும் எமது தொழிற்சாலைகளில் வேலைக்கு ஆட்கள் தேவை (ஆண்/பெண்)

- போத்தல் கழுவுதல், லேபிள் ஒட்டுதல், பெட்டிக்குள் அடைத்தல் போன்ற வேலைகள்.
- சம்பளம் 1500/= மதிய உணவு வழுங்கப்படும்

தொடர்புகளுக்கு:

074 026 3150, 077 433 4820

## வேட்பு...

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சித் தேர்தலுக்கு உடனடியாகவே வேட்புமனுக்களைக் கோருவீர்களாயின் அந்தத் தருணத்தில் என்னால் இந்த நாடாளுமன்றத்துக்கு வரமுடியாது போகும். நான் வேட்புமனுப் படிவங்களை நிரப்பச் செல்லவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு படிவத்திலும் கையொப்பமிட வேண்டிய நபர் கட்சியின் செயலாளராகிய நான்தான். அப்படியானால் இந்த வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் என்னால் எப்படிப் பங்கேற்க முடியும்? இந்த விவாதத்துக்கு வந்து பங்களிப்பதற்காகவே எனது மக்களிடமிருந்து எனக்கு ஆணை கிடைத்துள்ளது. இது எனக்கு மட்டுமல்ல இங்குள்ள அனைவருக்கும் உள்ளது.

தேர்தல் தள்ளிப்போகிறது என்று நீங்கள் குறிப்பிடுவது நியாயமானது. 3 மாதங்களுக்கு மேல் ஒருநாள் கூட மேலதிகமாக நாங்கள் கேட்கவில்லை. மார்ச் 21ஆம் திகதிவரை வேட்புமனுக்களைக் கோர வேண்டாம் என்றே கேட்கின்றேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துமாறே உச்ச நீதிமன்றம் சொல்கிறது. தற்போது நடைமுறைச் சிக்கல் இருப்பதை நாம் அனைவரும் ஒன்றுகூடி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சொன்னால், ஆணைக்குழுவினரும் நாங்கள் கேட்கும் நியாயத்தன்மையை வெளிப்படையாகப் புரிந்துகொள்வார்கள். மார்ச் மாதம் 21ஆம் திகதி வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு முடியும் வரை இங்கு வந்து பேசவேண்டும், அதுதான் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்ற எங்களுக்குக் கிடைத்த ஒரே வாய்ப்பு.

அரசாங்கம் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தேர்தல் ஆணைக்குழவை அணுகி, மார்ச் 21 ஆம் திகதிக்குப் பின்னர் நியாயமான திகதியைக் கேட்டால் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் அப்படிச் செய்யாமல் இருப்பது எங்களைப் போன்ற கட்சிகளின் வாக்குரிமையை திட்டமிட்டு மறுப்பதாகவே அமையும் - என்றார். (அ-எ-இ)

## செம்மணி...

மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பொலிஸாரிடம் நேற்று முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினரும், சிந்துபாத்தி மயான நிர்வாகசபை உறுப்பினருமான வை.கிருபாகரனால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த மனித எச்சங்கள் இன்னுமொரு மனிதப் புதைகுழியா? என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## கொத்து,...

சங்கம் தெரிவித்துள்ளது. 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், இலங்கைச் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்துக்கு எந்தவித சலுகைகளும் வழங்கப்படாததால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரைட் ரைஸ், கொத்து ஆகியவற்றின் விலை தலா 30 ரூபாவாலும், தேனீரின் விலை 5 ரூபாவாலும், பால்த்தேனீரின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## பாண்,...

எடுக்கப்பட்டுள்ளது. பிறீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் ஒரு கிலோக்கிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் குறைப் பதற்கு உடன்பட்டதைத் தொடர்ந்தே, பாணின் விலையைக் குறைப்பதாக வெதுப்பக உரிமையாளர்களும் அறிவித்துள்ளனர். (அ-ம-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1945



மறைவு 17 . 02 . 2025

### திருமதி மகேஸ்வரி நல்லதம்பி

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் நீராவியடி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நல்லதம்பி அவர்கள் நேற்றுமுன்தினம் (17.02.2025) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்-செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு நல்லதம்பி (ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், Dr. முகுந்தன் (THJ), ஜெயந்தன், Dr. நளாயினி (THJ), துஷ்யந்தன், வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.M.பிருந்தா (THJ), கலைச்செல்வி, Dr. S.கிரிதரன் (சத்திரசிகிச்சை நிபுணர், THJ), கம்சாயினி, தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அக்சயன், அகீசன், ஜனுஜா, ஜஸ்வின், தனுசியா, துஷான், தருண், அம்ருதா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், தனுஷ்கன், சுலக்ஷன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், மகாலிங்கம், Dr.சிவஞானம், காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் கலாநிதி, சிவகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மூத்ததம்பி, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 53, கடையிற்சுவாமி வீதி, நீராவியடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

021 221 4608

(CS 29820) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 09 . 1950



மறைவு 16 . 02 . 2025

### கந்தையா இலட்சுமிகாந்தன்

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், அரோ, சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இலட்சுமிகாந்தன் அவர்கள் கடந்த (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தையல்முத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் சுகாந் (லண்டன்),அனந் (லண்டன்), றஜீந் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுஜா, ஜெயபிரபா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தெட்சனாமூர்த்தி, பாலசுப்பிரமணியம், தனபாக்கியம், குணபாக்கியம், இரத்தினசபாபதி, வரதராசா மற்றும் கனேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனோஜன், கரிஷ், அனிஷ், அஷ்விகா, நியான், சைரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் குறும்பசிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

மனைவி-திருமதி ராஜேஸ்வரி (ராஜேஸ்)-076 790 7013

மகன்மார்

சுகாந்-0044 7791258187, அனந் - 0044 742 6864898

றஜிந்-0041 768192119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவு

பிறப்பு
15 • 09 • 1978



இறப்பு
14 • 03 • 2023

## அமரர் திரு.நடராசா கஜந்தன்

**(உரிமையாளர்- நியூ மைதிலி ஜுவலர்ஸ், சந்தோஷ் ஜுவல்லறி)**

அழகழகா வீடு கட்டி பவனி வர காரும் வேண்டி

ஊர்வலம் போகும் முன் மாயமாய்ப் போனீரோ !

அத்தனை வேர்வை சிந்தி மாளிகையாய் கடையும் கட்டி கணக்கு வழக்கு பார்க்கும் முன் காலனுடன் போனீரோ ??

அப்பனும் அம்மையும் தேடி அவசரமாய் போனீரோ !!

கடைக்குட்டி என்று கொண்டாடிய அக்காமாரையும், தம்பி உண்டேல் படைக்கஞ்சேன் என்ற அண்ணனையும் ஏமாற்றிப் போனீரோ !

மச்சினன் தயவுண்டேல் மலை ஏறலாம் என்ற அத்தான் மார்களின் ஆசைகளை நிராசை ஆக்கி விட்டு போனீரோ !!

மணி மணியாய் மூன்று செல்வங்களை பெற்றும் மறைந்த மூத்தவளை தேடி சொல்லாமல் போனீரோ !!

மக்கள் மருமக்கள் யாரும் வேண்டாம் என்றுதறிப் போனீரோ !

எங்கே போனீரோ எம்மை விட்டு

காடு மலை தாண்டி எம்மை காணா தேசம் போனீரோ !!

ஏன் எதற்கு என்று நாங்க கேட்கா தூரம் போனீரோ !!

எங்கள் ராசா நீயும் சொல்லாமல் போனதற்கு காரணம் சொல்ல மாட்டீரோ !!

**அணையாது உந்தன் நினைவுத் தீ!**
**********

கண்களில் நீரே ததும்ப
கவலையில் நெஞ்சம் வெதும்ப
எங்களில் ஒருவன் உன்னை
இழந்துநாம் வாடு கின்றோம்.
இங்ஙனம் உன்னைப் பிரிய
எவ்விதி நேர்ந்தது ஐயோ?
எங்ஙனம் எங்கே காண்போம்,
எம் உடன் பிறப்பே உன்னை?
அன்னம் நட ராசா என்னும்
அளப்பெரும் குடும்பப் பெருமை
முன்னம்போல் என்றும் திகழ
முத்தாப்பாய் இருந்தாய் தம்பி!
எண்ணம்போல் வாழ்ந்த உன்னை
எங்களில் இருந்து பிரித்துப்
பென்னம் பெரிய துயரைப்
பரிசளித் ததுதான் விதியோ?

கஜந்தன் என்றால் கருணை
காருண்யம் மிக்கோன் என்று
வியந்ததோர் காலம் கண்டு
விலாசமாய் வளர்ந்த தருணம்
பயன்தரும் விருட்சம் பாறி
விழுந்ததைப் போல நீயும்
இயல்புடன் இருந்த நாளில்
இடையினில் மடிந்தாய் ஏனோ?



**உன் ஆத்மா சாந்தி பெற வெள்ளைப் புற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்**

அன்னாரின் நினைவாக இன்று (19.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மணி மண்டபத்தில்** நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வில் பங்குகொண்டு அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

### உரிமையாளரும், பணியாளர்களும்

**மதனா நகை மாடம்**
இல.70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5526

**சிறி மதனா நகை மாளிகை**
இல.155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7772

**நகுலா ஜுவல்லறி**
இல.109, 111, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4134, 021 221 9119, 077 221 9119

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5511, 077 224 5511

**நியூ நகுலா ஜுவல்லர்ஸ்**
இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 4101

**மைதிலி நகை மாடம்**
(தனியார் நிறுவனம்)
இல.89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902

**யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்**
இல.79 Z, செட்டியார் தெரு, கொழும்பு -11
011 239 6239

உங்கள் பிரிவால் துயருறும்
**சகோதரர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.